# கண்ணதாசன் பாடல்கள் வழி கற்றல், கற்பித்தல்

ப. பாலசுப்பிரமணியம்

சிறுவனாக இருந்தபோது கவியரசு கண்ணதாசனின் பாடல்களை இவர் கேட்கத் தொடங்கினார். 14 வயதில் அந்தப் பாடல் வரிகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முனைந்தார். 'ஜிசிஇ' சாதாரண நிலைத் தேர்வில் அந்தப் பாடல் வரிகளையும் தமது கட்டுரையில் பயன்படுத்தினார்.

கவியரசு கண்ணதாசனின் பாடல்களை எப்படி மாணவர்களின் கற்றல், கற்பித்தலுக்கு பயன்படுத்தலாம் எனும் ஆய்வு கட்டுரையைத் தமது முனைவர் பட்டத்துக்காக ஒப்படைத்த ஆசிரியர் திரு எஸ்.பி.ஜெயராஜதாஸ் பாண்டியன் முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த சிங்கப்பூர் தேசிய கல்விக் கழக பட்டமளிப்பு விழாவில் அவர் பெற்ற முனைவர் பட்டம், ஏழு ஆண்டுகளின் கடின உழைப்பின் பலனாகும்.

வாழ்நாள் கற்றலுக்குச் சிறந்த உதாரணமாக, கல்வி அமைச்சின் சிங்கப்பூர் ஆசிரியர் கலைக் கழக தமிழ் மொழிக்கான தலைமை முதன்மை ஆசிரியராக திரு ஜெயராஜதாஸ் பணியாற்றுகிறார்.

1980ஆம் ஆண்டில், ஆசிரியர் பணிச் சான்றிதழோடு தம் ஆசிரியர் பணியைத் தொடங்கி, 1990களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்று, 2008ஆம் ஆண்டில் தேசிய கல்விக் கழகப் பாடகலைத் திட்டமும், கற்றலும் கற்பித்தலும் தொடர்பிலான முதுகலை பட்டத்தை இவர் பெற்றிருந்தார்.

"கவியரசு கண்ணதாசனைப் பற்றி தமிழகத்தில் பலரும் ஆய்வுக் கட்டுரையை மேற்கொண்டிருந்தாலும், மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் அப்பாடல்களை எப்படி பயன்படுத்தலாம் என்பது ஒரு புதுவித ஆய்வாகும்.

"சில சிங்கப்பூர் பள்ளிகளைச் சேர்ந்த உயர்நிலை இரண்டாம் வகுப்பு உயர்தமிழ் மாணவர்களின் பங்கேற்பு இதில் அடங்கியுள்ளது," எனத் தெரிவித்தார் 62 வயது திரு ஜெயராஜதாஸ்.

கண்ணதாசனின் பாடல் வரிகளிலிருந்து தமிழ்மொழி அமைப்பு, மொழிப் பயன்பாடு போன்ற அம்சங்களை மாணவர்கள் கற்றுக் கொள்ள முடியும் என்றும் இசையுடன் கூடிய பாடல்களை வகுப்பறையில் அறிமுகப்படுத்தும் போது அது மொழியை ஆர்வமுள்ள வகையில் கற்றுக்கொள்ள வகை செய்கின்றன என பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.



வாழ்நாள் கற்றலுக்கு முன்னுதாரணமாக விளங்கும் தலைமை முதன்மை ஆசிரியர் திரு ஜெயராஜதாஸ் கடந்த வியாழக்கிழமை முனைவர் பட்டத்தைக் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திருவாட்டி சான் லாய் ஃபாங்கிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். **படம்: நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்**

தமிழ்மொழிக் கற்றலை சுவாரசியமான முறையில் மாணவர்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க இசையுடன் கூடிய தமிழ்ப் பாடல்களை எவ்வாறு தமிழ்மொழி கற்பித்தல் முறையில் சேர்ப்பது குறித்து கல்வி அமைச்சின் ஆசிரியர்களிடம் பகிர்ந்துகொள்வது அவரின் அடுத்த கட்டப் பணியாகும்.

இந்த ஆய்வின் வழி அவர் உருவாக்கிய வடிவமாதிரியை ஆசிரியர்களிடம் பகிர்ந்துகொள்ள ஆவலுடன் இருக்கிறார்.

"சிங்கப்பூர் தேசிய கல்விக் கழகம் வழங்கும் இந்த முனைவர் படிப்பு வழி, உள்ளூர் மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்த பல ஆய்வுகளை மேற்கொள்ளலாம். இது கண்டிப்பாக தமிழ் ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டுக்கு உதவும்," என்றார் திரு ஜெயராஜதாஸ்.